# பன்னாட்டார் சிந்தனையில் திருக்குறள், இந்து சமய பண்பாடுகள்

89

**முனைவர். மா. கிருஷ்ணவேணி**
**உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை,**
**எம்.எம்.இ.எஸ். மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு என்று தமிழரை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர். வேறு எந்த இனத்திற்கும் மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கும் தமிழருக்கும் உண்டு. காரணம் மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதனை விட எப்படி வாழக் கூடாது என்று வாழ்வியலை கற்றுக் கொடுத்த தமிழரின் பண்பாட்டு அடிச்சுவடுகள் இன்றும் உலகம் முழுவதிலும் தடம் பதித்து இருக்கிறது என்றால் உயர்ந்த சிந்தனைகளையும் உயர்வான எண்ணங்களையும் சமூகம் எனும் மணற்பரப்பில் விதைத்துச் சென்றிருக்கிறது என்று தானே அர்த்தம். பண்பட்ட மண்ணில்தான் செடிகளும் கொடிகளும் துளிர்விடும். அதுபோல இந்தச் சமூகம் பண்பட வேண்டும் என்றால் நல்ல பண்பாடு இருக்க வேண்டும் என்பதனை தமிழினம் இத்தரணிக்குக் கற்று கொடுத்து இருக்கிறது. நாடாண்ட மன்னன் முதல் குடிமகன் வரை குலம் காக்கும் பண்பாட்டை கட்டிக் காத்து பார் போற்ற வாழ்ந்த இனம் தமிழினம். இது வரலாற்றுப் பதிவு. இலக்கியங்கள் தொடங்கி இன்றைய இணையம் வரைக்கும் தமிழரின் பண்பாடும் பதிவுகள் தன்னைக் காட்சிப்படுத்தி நிற்கிறது. நாகரீகம் என்ற பெயரில் தலைமுறை கடந்து விட்டாலும் தமிழரின் பண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலின் ஒவ்வொரு தளத்திலும் பின் தொடர்ந்து வருகிறது.

ஜாதி, மதம், இனம், நிறம், மொழி, நாடு என பல்வேறு பிரிவினைகள் சொல்லி நமக்குள் வேற்றுமையை ஏற்படுத்தி ஒற்றுமையான வாழ்க்கைக்கு உலைவைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழன் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று ஒற்றுமை வாழ்க்கைக்கு தன் பண்பாட்டு அடிச்சுவட்டை பதிவு செய்து எல்லா நாடும் நம் நாடே, எல்லா ஊரும் நம் ஊரே, எல்லோரும் நம் உறவுகளே இதில் வேற்றுமை வேண்டாம் எனச் சொன்ன இனம் தமிழினம். உண்ணும் உணவு முதல் உடுத்தும் உடை வரைக்கும் பண்பாடு போற்றப்படுகிறது. பிறப்பு முதல் இறப்பு வரைக்கும் வாழ்வியலின் ஒவ்வொரு நகர்விலும் பண்பாடு கடைபிடிக்கப்படுகிறது. உறவுகள் தொடங்கி இறை வழிபாடு வரைக்கும் பண்பாடு பறைசாற்றப்படுகிறது. இல்லறம் முதல் துறவறம் வரை பண்பாட்டு வாழ்வியல் பகிரப்படுகிறது. இப்படியாக ஊருக்கும் உலகத்திற்கும் உன்னதக் கருத்துகளையும் தனிமனித ஒழுக்கத்தையும் பண்பாடு என்ற பெயரில் அள்ளிக் கொடுத்த தமிழரின் தலை சிறந்த நாகரீக வாழ்வியலை உலகம் உச்சி நுகர்ந்து போற்றுகிறது. வழியில் வந்து செல்லும் வழிப் போக்கர்கள் கூட அமர்ந்து செல்ல திண்ணை அமைத்து வீடுகட்டிய தமிழரின் பண்பாட்டு கோட்பாட்டை யாரும் புறந்தள்ளி விட முடியாது இன்னும் எத்தனை காலங்கள் ஆனாலும் தமிழர் பண்பாடு தலை சிறந்து நிற்கும். தரணி போற்றும் தமிழரின் பண்பாட்டை இந்நாளில் நாமும் போற்றுவோம்.

தீதும் நன்றும் பிறர்தர வாரா எனும் உயரிய பண்பாட்டை உரக்கச் சொல்லியதும் தமிழினம் என்பதனை மறந்துவிடாதீர்கள். நாம் என்ன செய்கிறோமோ அது தான் நம்மிடம் திரும்பிவருகிறது. நாம் எதை விதைக்கிறமோ அது தான் முளைத்து நமக்கு பலன் கொடுக்கிறது. நல்லது நினைத்தால் நல்லதே நடக்கும். கெட்டது நினைத்தால் கெட்டதே நடக்கும் இது தான் வாழ்வியல் யதார்த்தம். ஆக நமக்கு நடக்கும்

நல்லவற்றிற்கும், கெட்டவற்றிற்கும் பிறரைக் குறை கூறாதீர்கள். அது உன்னிடம் இருந்து தான் முளைக்கப்படுகிறது என தமிழ்ப்பண்பாடு தான் கற்றுக்கொடுத்தது. ஒழுக்கத்தோடு வாழப்பழகிக்கொள்ளுங்கள் எனும் உயரிய சிந்தனையை எடுத்துச் சொல்லி இருக்கிறது. சமூகம் நலம் பெற, நாடு வளம் பெற ஒவ்வொரு தனிமனிதனும் ஒழுக்கத்தோடு வாழ வேண்டியது அவசியம்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" , "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் மனப்பான்மையுடன் பண்டைய காலத்திலிருந்தே தமிழர்கள் உலகநாடுகளில் எங்கனும் உலாவி வருகின்றனர். ஆகையால் உலகெங்கும் தமிழினத்துடன் ஒரு பழைமையான தொடர்பு உள்ள வரலாறு காணப்படுவது வியப்பில்லை. கடல் கடந்து சென்ற சங்ககாலத் தமிழர்கள் மகளிரைத் தங்களுடன் அழைத்துச் செல்லத் தயங்கினார்கள் எனும் தொல்காப்பிய நூற்பாவால் நம்மால் ஓரளவு புரிந்துகொள்ள முடிகின்றது மேலை நாடுகளில் இதுபோன்ற பதிவுகளும் பண்பாட்டுக் கூறுகளும் சொல்லப்படவும் எழுதப்படவும் இல்லை. ஆனால் உலகம் போற்றும் இது போன்ற உயர்வான பண்பாட்டுக் கருத்துக்களை உலகறியச் செய்தது தமிழரும் தமிழர் பண்பாடும் என்பதை இவ்வாய்வுச் சுருக்கத்தில் காணலாம்.

**முன்னுரை**

மனித இனத்திற்கே உரிய தனிப்பண்புகள் பல. அவற்றுள் ஒழுக்கம் முதன்மையாகப் போற்றப் பெறுகின்றது. ஒழுக்கம் உள்ள ஒருவனைப் பண்புள்ள மனிதனாக சமுதாயம் ஏற்றுக் கொள்கிறது. நல்ல ஒழுக்கம் எப்போதுமே நன்மையைத் தான் தரும். அதுபோல தீயொழுக்கம் என்றும் தீராத துன்பத்தையே கொடுக்கும் எனத் தெளிவாகக் கூறுகிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். சங்க காலத்தில் குற்றமாகக் கருதப்படாத பிறன் விழைதலை வள்ளுவர் கூடா ஒழுக்கம், கடியத்தக்கவை என்கிறார். தனி மனிதனுக்கு நற்குணங்கள் இருத்தல் வேண்டும். நற்குணங்கள் இல்லாதவன் அறிவுடையவனாக இருந்தாலும், மரத்தைப் போன்றவனாகவே கருதப்படுவான். நல்ல மனிதன் என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறான். ஒவ்வொரு தனி மனிதனின் ஒழுக்கமே சமூகத்தின் ஒழுக்கம். சமூகத்தின் ஒழுக்கமே நாட்டின் ஒழுக்கம். தனி மனித ஒழுக்கப்பண்பாடு என்பது அந்தந்த தனிமனிதனை மட்டும் சார்ந்து இருக்கவில்லை. தனி மனிதன் இனம், சமுதாயம் ஆகியவற்றையும் சார்ந்து இருக்கவில்லை. தனி மனிதன் இனம், சமுதாயம் ஆகியவற்றையும் சார்ந்து உருவாகிறது. கற்பு நெறியை ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவாக பண்பாட்டுத் திறனுடன் அமைத்துக் காட்டியுள்ளார் வள்ளுவர். இத்தகைய உயர்ந்த பண்பாட்டை பன்னாட்டாளர்களின் உரைவழி காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆல்பர்ட் சுவைட்சர் கூறும் திருக்குறள் சிந்தனைகள்**

வாழ்வுக்கு உரிய அன்பு நெறியைக் கூறும் உயர்ந்த நூல். உயர்ந்த ஞானத்தைப் புகட்டும் செம்மொழிகளின் தொகுப்பு. இது போல் உலக இலக்கியத்தில் வேறு எங்கும் இல்லை எனத் திருக்குறளை உளமாரப் போற்றும் சுவைட்சர், திருக்குறள் ஒப்புயர்வற்ற நூல் என அறுதியிட்டு உரைக்கின்றார். திருவள்ளுவரிடம் ஆல்பர்ட் சுவைட்சர் காணும் சிறப்பு- உலக இலக்கியத்தில் வேறு எந்த அறநூலிலும், தத்துவ இயலிலும் காணப்படாத தனிப்பெருஞ் சிறப்பு- அவரது உடன்பாட்டுக் தொகை ஆகும். உலக வாழ்வு பற்றிய எதிர்மறைச் சிந்தனையை வள்ளுவரிடம் மருந்துக்கும் கூடக்காண முடியாது. ஆல்பர்ட் சுவைட்சரின் உள்ளத்தினைக் கவர்ந்த சில குறட்பாக்கள்

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர் அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர் டால்ஸ்டாயின் உள்ளம் கவர்ந்த குறள் சிந்தனை மேதை டால்ஸ்டாயின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த நூலாகத் திருக்குறள் திகழ்ந்தது. டால்ஸ்டாய் இந்து ஒருவருக்கு என்னும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் திருக்குறள் காட்டும் வாழ்க்கை நெறியைச் சுட்டிக்காட்டியுள்ளார் இன்னா செய்யாமை அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள ஆறு குறட்பாக்களை மேற்கோள் காட்டி தம்முடைய உள்ளத்தைக் கவர்ந்தனவாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவன் தனக்குத் தீங்கு செய்தவர்களைத் தண்டிப்பதற்கு உரிய சிறந்த வழி, தீங்கு செய்தவர்களே வெட்கப்படுமாறு அவர்களுக்கு நன்மை தரும் செயல்களைச் செய்து, அவர்கள் செய்த தீங்கினையும், தான் செய்த நன்மையினையும் மறந்து விடுவதே ஆகும். என்ற கருத்தினைப் புலப்படுத்தும் வகையில் அமைந்த குறட்பா வருமாறு

"இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்".

இக்குறட்பா உளவியல் நுட்பம் வாய்ந்ததாக டால்ஸ்டாய் குறிப்பிட்டுள்ளார். பெர்னார்ட் ஷா உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் 94 ஆண்டுக் காலம் வாழ்ந்தவர். அவர் காய்கறி உணவு முறையே சிறந்தது என்னும் கொள்கையினை கடைப்பிடித்து வந்தவர். கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பிஎல்லா உயிரும் தொழும் என்னும் குறட்பாவின் கருத்தினை அவர் அடிக்கடி எடுத்துரைப்பதுண்டு. 1948 –ல் டைம்ஸ் ஆப் லண்டன் என்னும் பத்திரிகை ஒரு கருத்துப் படத்தினை வெளியிட்டது. அதில் பெர்னார்ட் ஷா ஒரு நாற்காலியில் அமர்ந்து இருப்பார். அவருடைய காலடியில் ஆடு.மாடு, மான், பன்றி, புறா போன்ற விலங்குகளும் பறவைகளும் நன்றி உணர்வோடு அவரைப் பார்த்த வண்ணம் படுத்துக் கொண்டும் நின்று கொண்டும் இருக்கும். அவரைச் சுற்றிலும் சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகள் அமைதியாக நின்று கொண்டு அவரை ஆர்வத்தோடு நோக்கிய வண்ணம் இருக்கும். இந்தக் கருத்துப் படம் வள்ளுவருடைய கொல்லான் புலாலை மறுத்தானை புலப்படுத்துவதற்காக வரையப்பட்டது. பொருள் பொதிந்த இந்தக் கருத்துப் படத்தினை டில்லியில் இருந்து வெளிவரும் ஷங்கர்ஸ் வீக்லி 1949 –இல் அப்படியே வெளியிட்டு, படத்தின் கீழே மேலே காட்டிய திருக்குறளைக் குறிப்பிட்டிருந்தது. புலால் உணவு உண்பதையே தம் வாழ்க்கைப் போக்காகக் கொண்டுள்ள மேற்கத்திய மக்கள் இடையே புலால் உண்ணாமையே சிறந்த வாழ்க்கை நெறி என்பதனை உணர்த்துவதற்காகப் பெர்னார்ட் ஷா இந்தத் திருக்குறளை மேற்கோள் காட்டி விளக்கி வந்தார் என்பதனை உணர்த்தவே இந்தக் கருத்துப் படம் வெளியானது.

**ஜி.யு.போப் சிந்தனையில் திருக்குறள்**

திருக்குறளை ஆங்கிலத்தில் முழுமையாக மொழிபெயர்த்து வெளியிட்டவர் ஜி.யு.போ. அந்நூலில் அவர் திருவள்ளுவரைப் போற்றிப் பாடியுள்ள அங்கிலக் கவிதை குறிப்பிடத்தக்கது. அதில், உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் மாறுகின்றன ஒரு நாள் மறைகின்றன. ஆனால் திருவள்ளுவருடைய புகழ்

மங்கவில்லை , பெருகிக் கொண்டே பொகின்றது என திருவள்ளுவரைப் பாராட்டியுள்ளார். இப்படி திருக்குறளைப் பற்றி உலக அறிஞர்கள் போற்றிக் கூறியுள்ள கருத்துக்களை காணுகின்ற பொழுது வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்துவான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாரதியார் பாடியிருப்பது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை என்பது உறுதியாகிறது.

**வள்ளுவரும் கன்புசியசும்**

தமிழ்நாட்டில் நீதி காவளராகச் சான்றோர்கள் இருந்தார்கள் அவர்களுள் திருவள்ளுவரும் ஒருவர். மிகவும் விரும்பி அறநெறியை சுமை தாங்கியாக ஏற்று மக்கள் முன் இலக்கியமாக்கி வைத்த கவிஞர். அறநெறியைத் தன்னால் முடிந்த வரை எளிதாகவும் அழகாகவும் கடுமையாகவும் யாது எனக் காட்டியவர். எதர்க்கும் அஞ்சாது அறநெறியை மீறினால் என்ன விளையும் என்று துனிந்து கூறுவதில் மனபக்குவமும் நெஞ்சு வலிமையும் கொண்டவர் என்பதை பல பாடல்களில் காட்டுகிறார். வள்ளுவர் போலவே சீன நாட்டில் கன்புசியசு தோன்றினார். சாதாரண நிலையிலிருந்து சான்றோராக உயர்ந்தவர். மிகவும் கடின உழைப்பால் அறிய வேண்டியதைத் தேடல் மூலம் கண்டவர். அவர் முன்னோர் விட்டு சென்ற சால்புகளை எளிதாக்கி சிறப்பாக்கி சீன மக்களுக்கு கொடுத்தவர். அறநெறிக் கருத்துகளைப் புகட்டிய ஆசான் என்று மக்கள் போற்றினார்கள். அவர் ஆராய்ந்து உரையாடல் செய்து வந்தார். மக்கள் எல்லாரும் அறிஞர்களாக மாற வேண்டும் என்று அவர் விரும்பினார். மாற்றவும் முயன்றார்.

திருவள்ளுவர் மனித சமுதாயத்தை அறநெறியில் செல்ல வழிகாட்டியுள்ளார். மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்று விரும்பினார். எல்லாரும் அறநெறியில் ஒழுங்காக நடந்தால் மாண்பு மிக்கவர்களாக வாழ முடியும் என்று இருவரும் நம்பினார்கள். அவர்களிடம் சில கருத்துகள் ஒத்துப்போகாவிட்டாலும் சமூக நலத்தின் முதன்மையான அறநெறிகளை சேர்ந்தே செல்லுகின்றன. அவர்களின் உயர்ந்த எண்ணங்கள். சிந்தனைகள் எவ்வாறு அறநெறி நோக்கில் வெளிப்படுகின்றன என்பதைக் "பட்டினியால் வாடும் மாண்புமிகு மனிதன் ஒருவேளை உணவு கிடைக்கிறது என்றால் கூட அதற்காக அவன் அறநெறியிலிருந்து பிறழமாட்டான்". முதலான உதாரணங்கள் மூலம் அறியலாம்.

காலத்தால் பழமையான கருத்துக்களையே கன்புசியஸ் அறநெறியாக்கி தந்தார். அவைகள் அவருடைய அனுபவங்கள் வாயிலாக கனிந்த முது மொழிகளாக விளங்குகிறது. எல்லா மனிதர்களையும் முன்னேற்ற அறநெறி வழிகாட்டும் பொதுமொழியாக விளங்குகிறது. வள்ளுவர் சிந்தனையும் அவரைப் போலவே அமைந்து அறநெறியாகச் செல்லுகிறது. மனித இனத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்று இருவரும் நினைத்தார்கள். செயல்பட்டார்கள் வான்புகழ் வள்ளுவமும் காலத்தை வென்ற கன்புசியஸீம் என்றும் எந்நாட்டிலும் அறநெறிகாட்டும் ஒளிரும் கதிர் ஒளியாக விளங்குவார்கள்.

**அயோத்திதாசர் கண்ட திருக்குறள் பண்பாடு**

கல்லால் விருட்சத்தின் கீழ் கமலாசனத்தில் வீற்று கமலநாதன் என்னும் பெயரும் பெற்ற புத்தபிரானை மலருற்று நடத்த வாமனென்றும், தாமரையாசனென்றும் கமலபாதன் என்றும் கொண்டாடு மாதாரத்தைக் கொண்டே வழிநூலார் மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்த போதே அவரது சீலத்தையும், ஒழுக்கத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் பெற்று நிப்பானமென்றும் நித்தியசுகம் பெறுவார்கள் என்னுந் துணிபால் நிலமிசை நீடு வாழ்வாரென வற்புறுத்திக் கூறியுள்ளார். மலர்மிசை யேகினான் என்பதற்குச் சார்பாய் பின்கலைநிகண்டி வாக்கியோன் மண்டலபுருடன் மூலநூற்று நடந்த வாமன் என்றும் திரிமந்திர வர்க்கியோன் திருமூலனார் கடந்து நின்றான் கமலாமலர் மீதே என்றும் சீவகசிந்தாமணி வாக்கியோன்


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

திருத்தக்கதேவர் விண்டலர் புந்தமாமரையின் விரைததும்ப மேனடந்தா என்றும், சூளாமணி யாக்கியோன் தோலாமொழித்தேவர் விரை மணங்கு தாமரை மேல் விண்வணங்கச் சென்றாய் என்றும் அறநெறிச்சார வாக்கியோன் முனைப்பாடியோர் தாமரைப் புவின் மேற்சென்றான் புகழடியை என்றும் சிலப்பதிகார வாக்கியோன் இளங்கோவடிகள் மலர்மிசைச் சென்ற மலரடிக் கல்லதென் றலைமிசையுத்தித் தானணிபெறாஅ என்றும் மலர்மிசை யேகினா னென்றும் மொழி புத்தபிரானை குறித்தவையெனத் துணிந்தோதிய விரிவு. எனவே திரிக்குறளாம் திருக்குறள் புத்தனுடைய சிந்தனைகளை மையப்படுத்தி எழுதப்பட்டிருப்பதாகப் பண்டிதர் கருதுகிறார். மணிமேகலையும்,

போதி நீழல் பொதிந்து தோன்றும்
நாதன்பாத நடைகெட வேத்தி
ஆதிமுதல்வன் அருந்துயர் கெடுக்கும்
பாதபங்கய மலர் பணிந்தனர் (மணி.12. 105-110)

என்ற வரிகளாலும் தாமரை மலரில் அமர்ந்த புத்தரை வணங்கி னால் நீடு வாழ்வார் என உறுதிபடுத்துகின்றார். பண்டிதர் அயோத்திதாசர் சமயம், இலக்கியம் என்ற இருபிரிவுகளில் விரிவான சிந்தனைகளை முன்வைத்திருக்கிறார். அதில் இலக்கியம் என்ற பகுதியில் திருக்குறளாகிய திரிக்குறள 55 இயல்களுக்குத் தமிழ்ப்பௌத்த அடிப்படையில் விரிவான உரை எழுதியிருக்கிறார். இந்த உரை குறித்தான ஆய்வுகள் விரிவாக்கப்பட வேண்டிய தேவைக்கு இக்கட்டுரை சான்றாகின்றது.

**மேலைநாட்டவரின் இந்து சமய பண்பாடு**

பன்னாட்டாளர்கள் இந்துப்பண்பாட்டம்சங்களில் பிரதிபலிக்கின்ற தத்துவம், இலக்கியம், சமயம், கலை மற்றும் வழிபாடுகள், நிறுவனங்கள், ஆலயங்கள் எனும் அம்சங்களின் அடிப்படையில் தமது பங்களிப்புக்களை மேற்கொண்டனர். அந்தவகையில் அகழ்வாராய்ச்சி மூலம் இந்தியாவில் தோன்றிய பண்பாடு இந்துபண்பாடு எனும் குறிப்பை உலகத்திற்கு வழங்கியவர்கள் மேலைநாட்டவர்கள். உலகில் பல பாகங்களிலும் நாகரிகங்கள் பல தோற்றம் பெற்றுக் காணப்பட்டன. மேலைநாடான அமெரிக்காவில் இந்துப்பண்பாடானது பல்வேறு வழிகளில் பேணப்பட்டு வருகின்றமையை அறியலாம். அமெரிக்காவின் மன்ரோ எனும் இடத்தில் ஸ்ரீவெங்கடேஸ்வரா கோயில் என்பன இந்தியாவின் பிட்ஸ்ஸ்பேர்க் எனப்படும் பட்டறை மூலம் உருவாக்கப்பட்டு இந்துப்பண்பாடு பேணப்பட்டு வருகின்றது. அங்கு காணப்படும் ஸ்ரீ சிவா விஷ்ணு அலயத்தில் வெற்றிகரமாக இந்துமதம் தொடர்பான கற்பித்தல்கள் இடம்பெறுகின்றன.

குறிப்பாக பிட்ஸ்பர்க் எனும் பகுதியிலிருந்து ஆசிரியர்களை வரவழைத்து இந்துமதம் தொடர்பாகவும் இந்தியர்களை வரவழைத்து இந்தியாவின் வரலாறு மற்றும் வளர்ச்சி என்பனவற்றோடு ஸ்ரீ வெங்கடேஸ்வர ஆலயத்தின் வரலாறு என்பவைகள் குறிப்பிடத்தக்கதாகும். அமெரிக்க பேராசிரியர் டேவிட் ஜே நியுமள் மற்றும் கல்வி ஆலோசகர் முரளி பாலாஜி போன்றோரின் இந்தியா மற்றும் இந்துமதம் தொடர்பான போதனைகளும் அணுகுமுறைகளும், விரிவுரைகள் என்பன அதிவேகமாக மேம்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்து தத்துவஞானியும் எலிசபத் டவுன் கல்லூரியின் பேராசிரியருமான ஜெப்ரி. டி. லாங் இந்துமதத்திற்கும் பக்திக்கும் பெரிய பங்களிப்பை ஆற்றியுள்ளார். அந்தவகையில் இந்துமதம் மற்றும் பகவத்கீதையின் தாக்கம் தொடர்பாகவும் விவாதித்தார் கோயில்களை இணைக்கும் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலமும் சுற்றியுள்ள சமுதாயங்களோடு இணைத்து

கல்வியலாளர்களுடன் வலுவான உறவை ஏற்படுத்திக் கொள்வதிலும் இந்து நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றமையை அறியலாம்.

தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றான இந்தோனேசியாவில் இந்துப்பண்பாடு தொடர்பாக பங்களிப்புக்களை மேலைநாட்டவர் ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் இந்தோனேசியா பாரிஸ்டா இந்தோனேசியா இந்துமதம் சங்கம் PHDI எனும் பெயரில் இந்துமத அமைப்பானது இந்து மத மறுமலர்ச்சிக்கு உதவும் பெரிய சீர்திருத்த இயக்கமாகக் காணப்படுகின்றது.

**தொகுப்புரை**

1. தமிழர்களின் புகழ் பெற்ற இலக்கியங்களுள் திருக்குறளும் ஒன்று. இந்நூலில், மனித வாழ்க்கைக்கு தேவையான அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.
2. பண்பு உடையவராக வாழும் நல்வழி யாரிடத்திலும் இருக்கவேண்டும் என்று குறள் உணர்த்துகின்றது. எவரும் தன்னை எளிதாகக் கண்டு பேசும் நிலையில் வாழ்ந்தால், பண்புடைமை.
3. நல்வழியை அடைவது எளிது என்றும் எண்களைப் போல் யாரும் புரிந்து கொள்ளும் வார்த்தைகளுடன் யாரிடமும் எளிமையாக பழகுதலே பண்புடைமை என்பது வழக்கு.

“அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு“

இதனால் தான் இந்நூலை உலக மக்கள் பலர் ஏற்று கொண்டுள்ளனர்.

**முடிவுரை**

உலகியல் சார்ந்த ஓர் அறநூல் திருக்குறள். இந்நூல் தமிழர்களுக்குக் கிடைத்த அரிய பெரும் பெட்டகம். மொழிபெயர்ப்புகள் வழியே திருக்குறளுக்கு வாய்த்துள்ள பெருமைகள் ஏராளம். ஐரோப்பிய சூழலில் போர் நெருக்கடிகள் மிகுந்துள்ளன. இவற்றுக்கிடையில் உலக அமைதி குறித்து சிந்திப்பவர்கள் திருக்குறளை மதிக்கிறார்கள். டால்ஸ்டாய் தன் நூல்களில் இருபது குறட்பாக்களை எடுத்தாண்டிருக்கிறார். ஐரோப்பிய மக்கள் பெரும்பகுதி கிறித்துவர்கள் திருக்குறளின் கருத்துகள் விவிலிய மொழியில் உள் கருத்ணதுகளோடு ஒத்துச் செல்கின்றன.

**துணை நின்ற நூல்கள்**

1. உலக நாடுகளில் தமிழ்ப் பண்பாடு. முனைவர் எஸ். நாகராசன்
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவுர்- 613 005
2. பதினெண்கீழ்க்கணக்கு ஆய்வுக்கோவை. முனைவர் இரா. ஜெகதீசன்,
முனைவர் வேல் கார்த்திகேயன் குறிஞ்சிப் பதிப்பகம்
3. உலக மொழிகளில் திருக்குறள். இரா தமிழிச்செல்வன். காவியா பதிப்பகம் சென்னை -24